வாரம் - 5 ஊக்கப் பாடல் எண் - 5

# மொழி வாழ்த்து

அன்னை மொழியே
அழகார்ந்த செந்தமிழே!
முன்னைக்கும் முன்னை
முகிழ்த்த நறுங்கனியே!

கன்னிக் குமரிக்
கடல்கொண்ட நாட்டிடையில்
மன்னி அரசிருந்த
மண்ணுலகப் பேரரசே!

தென்னன் மகளே!
திருக்குறளின் மாண்புகழே!
இன்னறும் பாப்பத்தே!
எண்தொகையே ! நற்கணக்கே!

மன்னுஞ் சிலம்பே!
மணிமே கலைவடிவே!
முன்னும் நினைவால்
முடிதாழ வாழ்த்துவமே.

சிந்தா மணிச்சுடரே!
செங்கை செறிவளையே!
தந்த வடமொழிக்கும்
தாயாகி நின்றவளே!

சிந்து மணற்பரப்பில்
சிற்றில் விளையாடி
முந்தை எகுபதியர்
மூத்த சுமேரியத்தார்

செந்திரு நாவில்
சிரித்த இளங்கன்னி !
சிந்துங் கலைவடிவே !
சீர்த்த கடற்கோளில்

நந்தாக் கதிரொளியே!
நாடகத்துப் பண்ணியலே !
வந்த குடிமரபோர்
வாழ்த்தி வணங்குவமே!

பாவலரேறு பெருஞ்சித்திரனார்

மொழிவாழ்த்துப் பாடலை ஆசிரியர் வரி வரியாகப்பாட
மாணவர்கள் அதனைத் தொடர்ந்து பாடவும்.

வாரம் - 5

## பேசிப் பழகுவோம் எண் - 3

| | | |
|---|---|---|
| YES | = | ஆம் |
| NO | = | இல்லை |
| WRIGHT | = | சரி |
| WRONG | = | தவறு |
| NEED | = | வேண்டும் |
| NO NEED | = | வேண்டாம் |

வாய்மொழியாகச் சொல்லிக் கொடுத்து நண்பர்களிடமும் உறவுகளிடமும் பேசிப் பழகச் சொல்லவும்.

| | |
|---|---|
| பாடத்தெரியுமா ? | ஆம் |
| பாடத்தெரியுமா ? | இல்லை |
| இது மரம் | சரி |
| இது மரம் | தவறு |
| தண்ணீர் வேண்டுமா | வேண்டும் |
| தண்ணீர் வேண்டுமா | வேண்டாம் |

ஆசிரியர் கவனத்திற்கு

ஆம் X இல்லை, சரி X தவறு, வேண்டும் X வேண்டாம்

என்பதற்கான சூழலை உருவாக்கி ஆறு சொற்களையும் மாணவர்கள் மனதில் பதிக்கவும், . வினாக்கேட்டால் பதில் சொல்ல ஊக்குவிக்கவும். . மாணவர்களிடையே பேச வாய்ப்புத்தரவும். பேசச் சொல்லவும்.




அழகாக எழுதவும் ஒலிக்கவும் பயிற்சி தரவும். எழுத்துகளை எங்கு தொடங்கி எங்கு முடிக்க வேண்டும் என்பதற்கும் பயிற்சி தரவும். எழுத்துகள் அழகாக இல்லை என்றால் நேர்கோடு வளைகோட்டுப் படங்களை எழுதுவதற்கு முன்பாகப் பயிற்சி தரவும்.

## வாரம் - 5

**மாணவர் செயற்பாடு எண் - 1**

**மாணவர் பெயர் ...................................... நிலை........... நாள்...............**

( கற்றுக்கொண்ட ச ச் எழுத்துகளை கீழே எழுதிப் பழகவும் )

| | | | | | |
|---|---|---|---|---|---|
| ச | ச் | ச | ச் | ச | ச் |
| | | | | | |
| | | | | | |
| | | | | | |
| | | | | | |
| | | | | | |

# வாரம் - 5

## மாணவர் செயற்பாடு எண் - 2

**மாணவர் பெயர் ....................................... நிலை........... நாள்...............**

( கற்றுக்கொண்ட ச ச் எழுத்துகளை கீழே வட்டமிடவும் )

செ, சே, சா, சோ - எழுத்துகளில் உள்ள ச வை வட்டமிட்டாலும் சரியே

## செல்வாக்கை நிரூபிக்க...

## ● கடப்பாவில்

## மே 8ல் இடைத்தேர்தல்



ஆந்திர அரசியல் வட்டாரங்கள் தெரிவித்தன.

**ஜெகன் ஆவேசம்:** இதற்கிடையே, ஜெகன் மோகன் ரெட்டி, செய்தியாளர்களிடம் நேற்று கூறியதாவது:

கடந்த 2004ல் இருந்து தற்போது வரையிலான காலத்தில், நில ஒதுக்கீடு விவகாரத்தில் நடந்த முறைகேடுகள் குறித்து விவாதிக்க, சட்டசபை கூட்டுக் குழுவை அமைக்க வேண்டுமென, தெலுங்கு தேசம் கட்சியினர், சட்டசபையில் தொடர்ந்து அமளியில் ஈடுபடுகின்றனர்.

அவர்களின் கோரிக்கையை ஏற்று, சட்டசபை கூட்டுக் குழுவை அமைக்கும் நடவடிக்கையை, காங்கிரஸ் அரசு மேற்கொண்டு வருகிறது. எனக்கு நெருக்கடி கொடுப்பதற்காகவே, தெலுங்கு தேசமும், காங்கிரசும் இணைந்து செயல்படுகின்றன. இதுவும் ஒரு வகையில், 'மேட்ச் பிக்சிங்' போன்றது தான்.

இவ்வாறு ஜெகன் மோகன் ரெட்டி கூறினார்.

அதே சமயம், சமீபத்தில் நடந்த ஆந்திர மேலவைத் தேர்தலில் ஜெகன் ஆதரவாளர்கள் தேர்வு செய்யப்பட்டிருப்பது அவருக்கு மகிழ்ச்சி தந்தாலும், அவரது வருமான வரி கணக்குகளை மீண்டும் தோண்டி எடுக்கும் செயல் நடக்கிறது.

இந்நிலையில் இடைத்தேர்தல் அறிவிப்பானது, ஜெகன் மோகன் அரசியல் செல்வாக்கு மக்களிடையே எப்படி இருக்கிறது என்பதை நிரூபிக்கும் என்பதால் அதிக பரபரப்பை ஏற்படுத்தும்.

னாமா ...ற்கும் ...தியை ...தாகுதி ...தாகுதி ...ம் 8ம் ...டுத்த ...தயின் ... என்ற ...னவே, ...ஆர்., ...டியும், ...வரது ...ர் என,

## சாக்கோ எழுப்புகிறார் சந்தேகம்

**திருச்சூர், ஏப். 1-**

'பார்லிமென்ட் கூட்டுக் குழுவில், முன்னாள் அமைச்சர்கள், உறுப்பினர்களாக இருப்பது குறித்து எழுப்பப்பட்ட சந்தேகத்தை, சபாநாயகர் மீரா குமாரின் கவனத்துக்கு கொண்டு சென்றுள்ளேன்' என, பார்லிமென்ட் கூட்டுக் குழு தலைவர் சாக்கோ கூறினார்.

ஸ்பெக்ட்ரம் '2ஜி' ஒதுக்கீட்டில் நடந்த முறைகேடு குறித்து விசாரிப்பதற்காக, பி.சி.சாக்கோ தலைமையில் பார்லிமென்ட் கூட்டு குழு அமைக்கப்பட்டுள்ளது. இந்த குழுவின் முதல் கூட்டம், கடந்த வாரம் நடந்தது.

இந்த குழுவில், தே.ஜ., கூட்டணியில் அமைச்சர்களாக இருந்த யஷ்வந்த் சின்கா, ஜஸ்வந்த் சிங் ஆகியோர், உறுப்பினர்களாக இருப்பதற்கு, சிலர் எதிர்ப்பு தெரிவித்தனர். இதையடுத்து, இந்த விவகாரத்தை, லோக்சபா சபாநாயகரின் கவனத்துக்கு, சாக்கோ கொண்டு சென்றார். இதை பா.ஜ., கடுமையாக விமர்சித்தது.

இது குறித்து கேரளாவுக்கு வந்திருந்த சக்கோ, செய்தியாளர்களுக்கு அளித்த பேட்டி:

தே.ஜ., கூட்டணியில் அமைச்சர்களாக இருந்த சிலர், தற்போதைய பார்லிமென்ட் கூட்டு குழுவில் உறுப்பினர்களாக இருப்பதற்கு, குழுவில் இடம் பெற்றுள்ள சிலர், எதிர்ப்பு தெரிவித்தனர். எனவே, இந்த விவகாரத்தில் உரிய நடவடிக்கை எடுக்கும்படி, சபாநாயகர் மீரா குமாரின் கவனத்துக்கு கொண்டு சென்றேன்.

கூட்டு குழுவில் இடம் பெற்றுள்ள உறுப்பினர்கள் எதிர்ப்பு தெரிவித்தால், அதை சபாநாயகரின் கவனத்துக்கு கொண்டு செல்வது என்பது விதிமுறை. இதைத் தான் நான் செய்துள்ளேன். இதில் தவறு எதுவும் இல்லை. இந்த விவகாரத்தில் இதற்கு முந்தைய பார்லிமென்ட் கூட்டுக் குழுக்கள், எவ்வாறு செயல்பட்டதோ, அதே வழிமுறையைப் பின்பற்றித் தான், நான் செயல்படுகிறேன்.

## தேர்தல் பிரசாரத்திற்கு சோனியா வருவாரா? மேலிடம் மவுனம்

**சென்னை, ஏப். 1-**

சட்டசபை தேர்தல் பிரசாரத்துக்கு காங்கிரஸ் தலைவர் சோனியா வருவது இதுவரை உறுதி செய்யப்படவில்லை. இதனால், தமிழகத்தில் பிரசாரம் செய்ய அவர் வர மாட்டார் என்று கூறப்படுகிறது.

தேர்தல் பிரசாரம் முடிய இன்னும் 0 நாட்களே உள்ளன. சோனியா ... போலீசார் கூறுகின்றனர்.

சோனியா வருகைக்கு, தி.மு.க.,வினரும் ஏற்பாடுகள் செய்வர். ஆனால், அவரது வருகை இது வரை உறுதி செய்யப்படவில்லை என, தி.மு.க., தரப்பில் கூறுகின்றனர்.

மேலும், தி.மு.க., தலைவர் கருணாநிதியின் பிரசாரப் பயணத் திட்ட அறிவிப்பும், சோனியாவின் வருகையை உறுதி செய்யும் வகையில் ... யிலும், 6ம் தேதி மதுரையிலும் பிரசாரம் செய்வதாகக் கூறப்பட்டுள்ளது. இந்தத் தேதிகளில், சோனியாவின் தமிழக வருகை உறுதி செய்யப்படவில்லை. கோவை, திருச்சி நகரங்களில், கருணாநிதி பிரசாரத்தை முடித்துவிட்டார் என்பது குறிப்பிடத்தக்கது.

கட்சித் தலைவர்கள் பிரசாரத்துக்கு வருவது பற்றி, தேர்தல் கமிஷ... பதிவு செய்தால், அவரது பய...

# வாரம் - 5

## மாணவர் செயற்பாடு எண் - 3

**மாணவர் பெயர் .................................... நிலை........... நாள்...............**

( மாணவர்களே வகுப்பறையில் எழுத்தை இணைத்துப் படிக்க ஊக்குவிக்கவும். இதனை வீட்டிற்குக் கொடுத்து, பயிற்சி செய்து , அடுத்த வாரம் வரும் பொழுது **இயல்பாகப் படிக்க** ஊக்குவிக்கவும். மாணவர்கள் இதனை மனப்பாடம் செய்து ஒப்புவிக்கக் கூடாது. )

## நினைவூட்டல் -

ட்ட , டட் , ப்ப , பப் , பட பட , பட் பட்

டப பட , டப டப , டப் டப் , பட பட்

மம் ம்ம , மட மட் , டம் பம், டம டம



## வாரம் - 5

**வீட்டு வேலை எண் - 1**

**மாணவர் பெயர் ....................................... நிலை........... நாள்...............**

# ட ட் , ப ப் , ம ம் , ச ச்

( எட்டு எழுத்துகளையும் ஒலித்துக் கொண்டே கீழே வட்டமிடவும்)

### செல்வாக்கை நிரூபிக்க...

### • கடப்பாவில் மே 8ல் இடைத்தேர்தல்



ஆந்திர அரசியல் வட்டாரங்கள் தெரிவித்தன.

**ஜெகன் ஆவேசம்:** இதற்கிடையே, ஜெகன் மோகன் ரெட்டி, செய்தியாளர்களிடம் நேற்று கூறியதாவது:

கடந்த 2004ல் இருந்து தற்போது வரையிலான காலத்தில், நில ஒதுக்கீடு விவகாரத்தில் நடந்த முறைகேடுகள் குறித்து விவாதிக்க, சட்டசபை கூட்டுக் குழுவை அமைக்க வேண்டுமென, தெலுங்கு தேசம் கட்சியினர், சட்டசபையில் தொடர்ந்து அமளியில் ஈடுபடுகின்றனர்.

அவர்களின் கோரிக்கையை ஏற்று, சட்டசபை கூட்டுக் குழுவை அமைக்கும் நடவடிக்கையை, காங்கிரஸ் அரசு மேற்கொண்டு வருகிறது. எனக்கு நெருக்கடி கொடுப்பதற்காகவே, தெலுங்கு தேசமும், காங்கிரசும் இணைந்து செயல்படுகின்றன. இதுவும் ஒரு வகையில், 'மேட்ச் பிக்சிங்' போன்றது தான்.

இவ்வாறு ஜெகன் மோகன் ரெட்டி கூறினார்.

அதே சமயம், சமீபத்தில் நடந்த ஆந்திர மேலவைத் தேர்தலில் ஜெகன் ஆதரவாளர்கள் தேர்வு செய்யப்பட்டிருப்பது அவருக்கு மகிழ்ச்சி தந்தாலும், அவரது வருமான வரி கணக்குகளை மீண்டும் தோண்டி எடுக்கும் செயல் நடக்கிறது.

இந்நிலையில் இடைத்தேர்தல் அறிவிப்பானது, ஜெகன் மோகன் அரசியல் செல்வாக்கு மக்களிடையே எப்படி இருக்கிறது என்பதை நிரூபிக்கும் என்பதால் அதிக பரபரப்பை ஏற்படுத்தும்.

னாமா
ாக்கும்
திியை
தாகுதி
தாகுதி
ம் 8ம்
அடுத்த
தயின்
என்ற
னவே,
.ஆர்.,
டியும்,
அவரது
ர் என,

### சாக்கோ எழுப்புகிறார் சந்தேகம்

திருச்சூர், ஏப். 1-

'பார்லிமென்ட் கூட்டுக் குழுவில், முன்னாள் அமைச்சர்கள், உறுப்பினர்களாக இருப்பது குறித்து எழுப்பப்பட்ட சந்தேகத்தை, சபாநாயகர் மீரா குமாரின் கவனத்துக்கு கொண்டு சென்றுள்ளேன்' என, பார்லிமென்ட் கூட்டுக் குழு தலைவர் சாக்கோ கூறினார்.

ஸ்பெக்ட்ரம் '2ஜி' ஒதுக்கீட்டில் நடந்த முறைகேடு குறித்து விசாரிப்பதற்காக, பி.சி.சாக்கோ தலைமையில் பார்லிமென்ட் கூட்டு குழு அமைக்கப்பட்டுள்ளது. இந்த குழுவின் முதல் கூட்டம், கடந்த வாரம் நடந்தது.

இந்த குழுவில், தே.ஜ., கூட்டணியில் அமைச்சர்களாக இருந்த யஷ்வந்த் சின்கா, ஜஸ்வந்த் சிங் ஆகியோர், உறுப்பினர்களாக இருப்பதற்கு, சிலர் எதிர்ப்பு தெரிவித்தனர். இதையடுத்து, இந்த விவகாரத்தை, லோக்சபா சபாநாயகரின் கவனத்துக்கு, சாக்கோ கொண்டு சென்றார். இதை பா.ஜ., கடுமையாக விமர்சித்தது.

இது குறித்து கேரளாவுக்கு வந்திருந்த சக்கோ, செய்தியாளர்களுக்கு அளித்த பேட்டி:

தே.ஜ., கூட்டணியில் அமைச்சர்களாக இருந்த சிலர், தற்போதைய பார்லிமென்ட் கூட்டு குழுவில் உறுப்பினர்களாக இருப்பதற்கு, குழுவில் இடம் பெற்றுள்ள சிலர், எதிர்ப்பு தெரிவித்தனர். எனவே, இந்த விவகாரத்தில் உரிய நடவடிக்கை எடுக்கும்படி, சபாநாயகர் மீரா குமாரின் கவனத்துக்கு கொண்டு சென்றேன்.

கூட்டு குழுவில் இடம் பெற்றுள்ள உறுப்பினர்கள் எதிர்ப்பு தெரிவித்தால், அதை சபாநாயகரின் கவனத்துக்கு கொண்டு செல்வது என்பது விதிமுறை. இதைத் தான் நான் செய்துள்ளேன். இதில் தவறு எதுவும் இல்லை. இந்த விவகாரத்தில் இதற்கு முந்தை பார்லிமென்ட் கூட்டுக் குழுக்கள், எவ்வாறு செயல்பட்டதோ, அதே வழிமுறையைப் பின்பற்றித் தான், நான் செயல்படுகிறேன்.

### தேர்தல் பிரசாரத்திற்கு சோனியா வருவாரா? மேலிடம் மவுனம்

சென்னை, ஏப். 1-

சட்டசபை தேர்தல் பிரசாரத்துக்கு காங்கிரஸ் தலைவர் சோனியா வருவது இதுவரை உறுதி செய்யப்படவில்லை. இதனால், தமிழகத்தில் பிரசாரம் செய்ய அவர் வர மாட்டார் என்று கூறப்படுகிறது.

தேர்தல் பிரசாரம் முடிய இன்னும் 0 நாட்களே உள்ளன. சோனியா

போலீசார் கூறுகின்றனர்.

சோனியா வருகைக்கு, தி.மு.க.,வினரும் ஏற்பாடுகள் செய்வர். ஆனால், அவரது வருகை இதுவரை உறுதி செய்யப்படவில்லை என, தி.மு.க., தரப்பில் கூறுகின்றனர்.

மேலும், தி.மு.க., தலைவர் கருணாநிதியின் பிரசாரப் பயணத் திட்ட அறிவிப்பும், சோனியாவின் வருகையை உறுதி செய்யும் வகையில்

யிலும், 6ம் தேதி மதுரையிலும் பிரசாரம் செய்வதாகக் கூறப்பட்டுள்ளது. இந்தத் தேதிகளில், சோனியாவின் தமிழக வருகை உறுதி செய்யப்படவில்லை. கோவை, திருச்சி நகரங்களில், கருணாநிதி பிரசாரத்தை முடித்து விட்டார் என்பது குறிப்பிடத்தக்கது.

கட்சித் தலைவர்கள் பிரசாரத்து... வருவது பற்றி, தேர்தல் கமிஷ... பதிவு செய்தால், அவரது பய...

# வாரம் - 5

## வீட்டு வேலை எண் - 2

**மாணவர் பெயர் ...................................... நிலை........... நாள்...............**

(கற்றுக்கொண்ட எழுத்துகளைக் கீழே எழுதிக் கொண்டு வரவும் )
(எழுதும் பொழுது எழுத்துகளை ஒலித்துக் கொண்டே எழுதவும்)

| | | | | | |
|---|---|---|---|---|---|
| ப ப் | ம ம் | ச | ச் | ச | ச் |
| | | | | | |
| | | | | | |
| | | | | | |
| | | | | | |
| | | | | | |